உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 சுபகிருது வருடம் தைத் திங்கள் பூமி–11
சனவரி 2024



## வாய் வீரம் பேசாமல் வயிற்றுப் பசி போக்க வழி பாருங்கள்...!



நாட்டை ஆள்பவர்களோ அரசியல்வாதிகளோ ஏழை மக்களை பற்றி கவலைப்படுவதில்லை கண்ணிரை துடைப்பதற்கோ முன்வருவதில்லை எதுவாக இருந்தாலும் மனிதனின் அடிப்படை தேவையாகிய உணவு,சுகாதாரம்,இருப்பிடம் இவை முன்றிற்கும் இந்த நாட்டில் கஸ்ரமான சூழல் ஏற்பட்டுள்ளது பஞ்சம் என்பது வெளிப்படையாக தெரியாவிட்டாலும் ஒருவேளை நல்ல உணவை உண்ண முடியாது தவிர்த்து வருபவர்கள் ஏராளம் பேர் இருக்கிறார்கள் .

மரக்கறியாக இருந்தால் என்ன உணவுபண்டங்கள் என்றால் என்ன விலைகள் மிக அதிகமாக அதிகரித்து உள்ளது.ஒரு சாதாரண

இடுபட்டுள்ள அன்றாட உத்தியோகம் பார்பவர்கள் கூட களைப்பைபோக்குவதற்கு தேநீர் அருந்தகூட முடியாத நிலை உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது.

இத்தகைய நிலையில் நிறுவனங்கள் அதற்கு ஏற்ப சம்பளத்தை கொடுக்க முடியாத நிலையில் வருவாய் அற்ற நிறுவனங்களாக செயற்பட்டுவருகிறது.

வடக்கில் வந்த துன்பம் என்னவென்றால் தென்னிலங்கையை சேர்ந்த பெரிய நிறுவனங்கள் பல்பொருள் அங்காடி என்ற பெயரில் பெரிய அங்காடிகளை உருவாக்கி பணத்தை திரட்டி கொண்டு செல்கிறார். இதனால் கிராமத்தில் உள்ள வர்த்தகர்கள் ,வாணிபர்கள் ,பெட்டிக்கடைகள் வியாபாரத்தை இழந்து முடும்நிலை ஏற்பட்டுள்ளது,தென்னிலங்கையில் இருந்து வியாபாரம் செய்யும் பலபொருள் வாணிபங்கள் கடன்கள் வழங்கமாட்டார்கள் .

இத்தகைய பொருளாதார சூழ்நிலையில் கடன் இல்லை ,உணவில்லை ,நெருக்கடியான சூழலில் மக்கள் தவிக்கிறார்கள் .

உண்மையான மக்களின் உணர்வுபூர்வமான பிரச்சினையை யாரும் அறிந்து கொள்வதில்லை வேடிக்கையான பேச்சுக்களை நாங்கள் நடாத்திக் கொண்டிருக்கிறோம் கூட்ங்களை நடாத்திக் கொண்டிருக்கிறோம்.ஏழைமக்களை யாரும் திரும்பி பார்பதில்லை.

**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்

**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்

**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

இலங்கை மக்களின் மிக முக்கியமான உணவு தேவையை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கமும் அனைத்து அரசியல் தலைவர்களும் அதற்காக உருப்படியான வேலைகளை செய்து மூன்று வேளையும் மக்கள் கஸ்ரப்படாது உணவை உட்கொள்ள வழிசெய்ய முடியாத நிலையில் என்னதான் வாய் வீரம் பேசுவதனாலும் அர்தம் இல்லை இத்தகைய அரசியல் சூழலால் தான மக்கள் நாட்டை வீட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் .

வெளியேறவும் வசதியில்லாத ஏழைகள் வாடிவதங்கி கொண்டிருக்கிறார்கள். நல்ல சுகாதாரமான உணவு கிடைக்காது எத்தனையோ குழந்தைகள் நோயால் வாடுகிறார்கள் இவற்றையாருக்கு எடுத்துரைப்பது என்று சிந்திப்பதை தவிர வேறுவழியில்லை எல்லாம் வல்ல இறைவனே காத்தருள வேண்டும் என்றார்.

**கலாநிதி. ஆறு.திருமுருகன்**
**சிவபூமி பத்திரிக்கை ஆசிரியர்**

# சிவபூமி மலையக ஆச்சிரமத்தில் சிறப்பாக நடைபெற்ற ஆண்டு விழா

மலையக மக்களுக்காக கண்டி கலகாவில் உருவாக்கப்பட்ட சிவபூமி மலையக ஆச்சிரமம் தனது முதலாவது ஆண்டு விழாவை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் கடந்த 18.01.2024 வெகுசிறப்பாக கொண்டாடியது. மலையக மக்களின் பங்குபற்றலுடன் மழலைகளின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. அறநெறிப் பாடசாலை, அபயம் இலவச மருத்துவ சேவை என்பன போன்ற பல சேவைகள் இந்த ஆச்சரியத்தில் நடைபெறுகின்றன.











# சிறப்பாக நடைபெற்ற சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் அறக்கொடை விழா





சிவத்தமிழ் செல்வியின் 99வது பிறந்தநாள் அறக்கொடை விழா (07.01.24) அன்று செஞ் சொற்செல்வர் தலைமையில் தெல்லிப்ழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரனும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவசிறீ மற்றும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வைத்திய கலாநிதி பாலகோபி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் சிவலிங்கராசா, வைத்திய கலாநிதி அருளானந்தம், இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், நாதஸ்வர வித்துவான் இ.கேதீஸ்வரன் மற்றும் இளைப்பாறிய அதிபர் மு.அருணாசலம் ஆகிய ஐந்து பெருந்தகைகளுக்கு சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருதுகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து, தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலைக்கு ரூபா 2 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டதுடன், உடுவில் கோட்ட கல்வி பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.













# மிகப்பிரமாண்ட பொங்கல்த் திருவிழா



இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகப் பிரமாண்டமாக பொங்கல் விழா ஒன்று கிழக்கிலங்கையில் நான்கு நாட்களாக இடம்பெற்றுள்ளது.

தமிழரின் வரலாற்று பொங்கல் நிகழ்வில் வரலாறு காணாத நடன ஆற்றுகையை நிகழ்த்திய கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள்.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஜல்லிக்கட்டு விளையாட்டு இலங்கை இந்திய ஜல்லிக்கட்டு ஆர்வலர்களின் ஒத்துளைப்புடன் சம்பூர் மண்ணில் நடத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மாபெரும் படகோட்டப்போட்டி கிண்ணியாவிலே நடைபெற்றது. அதோடு ஆயிரத்திற்கு மேற்பட்ட பானைகளில் பொங்கல் பொங்கும் நிகழ்வும் நடைபெற்றது. மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான குழு ரீதியான கோலப்போட்டி மற்றும் சிலம்பம் போட்டி என்பனவும் நடைபெற்று இளம் தலைமுறையினருக்கு தமிழர் பாரம்பரியத்தை அறிவிக்கும் நிகழ்வாக இவ்விழா சிறப்புப் பெற்று இருந்தது.



மேலும் ஒரு வரலாற்று சாதனை நிகழ்வாக 1500 பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற மாபெரும் நடன நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது. இவ் நடன நிகழ்வின் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை மாவட்ட பாடசாலைகளை சேர்ந்த மாணவ மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். இவ் நடன ஆற்றுகை பார்ப்போரை பிரமிப்பூட்டும் வகையில் கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.






# தமிழ் கலாசாரத்தை பிரதிபலிக்கும் திருச்சி விமான நிலைய பயணிகள் முனையம் திறந்து வைப்பு

இந்தியாவின் திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இந்திய ரூ.951 கோடியில் கட்டப்பட்ட பயணிகள் முனையம் 02.01.2024 காலை பிரதமர் நரேந்திர மோடியினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த முனையம் 60,723 சதுரமீட்டர் பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில், ஒரே சமயத்தில் 4,000 சர்வ தேச பயணிகள், 1,500 உள்நாட்டு பயணிகளை கையாள முடியும்.












இந்த புதிய பயணிகள் முனையத்தின் சிறப்பாக இந்தியாவின் தமிழ் கலாச்சார, பண்பாடு மற்றும் திருவிழாக்களை மையமாக கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் ஆலயத்தின் இராஜகோபுரம் போன்ற மாதிரி கோபுரம் புதிய முனையத்தின் முகப்பில் வண்ணமயமாக பார்ப்போர் கண்களை கவரும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்செல்லும் வெளியேறும் வாயில்களிலும் இந்து ஆலய கோபுர முகப்பு வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன . உள்ளே சுவரில் நடராஜர் சிற்பங்கள் , இந்து கடவுள்களின் படங்களும் வரையப்பட்டுள்ளதுடன் பிரமாண்ட திரையில் ஆலய தேர் கலாசார நடனங்களும் உள்ளன. இதேபோல, வருகை, புறப்பாடு , பயணிகள் காத்திருப்பு அறைகள் போன்ற பகுதிகளில் புதிய அதிநவீன வசதிகளுடன் உள்கட்டமைப்பு மற்றும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.



புதிய முனையத்தின் உள்ளே புறப்பாடு பகுதியில் 10 வாயில்கள், வருகை பகுதியில் 6 வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. 40 குடியேற்றப்பிரிவு மையங்கள், 48 செக் - இன் மையங்கள், 3 சுங்கப்பிரிவு மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 10 இடங்களில் ஏரோ ப்ரிட்ஜ், 3 இடங்களில் விஜபி காத்திருப்பு அறைகள், 26 இடங்களில் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர், 1,000 கார்களை நிறுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த முனையத்தில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் விமானநிலையத்தின் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது.

# குடமுழுக்கு காணும் நயினையின் தேவி

வரலாற்றுச்சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் மகா கும்பாபிஷேக பெருவிழாவிற்கான பிரதிஷ்டா பூர்வாங்க கிரியைகள் 16.01.2024 அதிகாலை 5.00 மணிக்கு பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது.

**எண்ணைக் காப்பு சாத்துதல்**
22ம், 23ம்திகதி தை 2024

**மகா கும்பாபிஷேகம்**
24.01.2024 காலை 8.30 - 11.30 வரையான சுபமுகூர்த்த வேளையில்.







# இயக்கச்சி நாய்கள் சரணாலயம் மூடப்படுகிறது

எமது சிவபூமி அறக்கட்டளை நிர்வகிக்கப்பெற்றுவந்த இயக்கச்சி நாய்கள் சரணாலயம் மூடப்படுகிறது. மக்களின் பங்களிப்புகள், மற்றும் நாய்கள் சார்ந்த மருத்துவ உதவிகள் எமக்கு உரிய வகையில் உரிய தரப்பினரால் கிடைக்காமையால், மிருகங்கள் மீது பற்றுள்ள வேலையாள்கள் இல்லாதமையாலும் குறித்த ஜீவகாருண்ய சேவையை 15.12.2023 நிறைவுக்கு கொண்டுவருவதில் எமக்கு கவலையும் வேதனையையும் தருகிறது. எனவே குறித்த எமது சரணாலயத்தில் இருக்கும் நாய்க்குட்டி தவிர ஏனைய மக்களால், உள்ளூராட்சி சபைகளினால், பாதுகாப்பு தரப்பினர், ஏனைய திணைக்களங்களால் கொண்டு வரும் நாய் குட்டிகளை உள்வாங்குவது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. (எனவே குறித்த தரப்பினர் சிரமத்தை தவிர்த்து கொள்ளுங்கள்)



# இசைவாணர் எம்.கண்ணனுக்கு சாதனைத் தமிழன் விருது




யாழ்ப்பாணத்தில் டான் தொலைக்காட்சி குழுமம் வருடாந்தம் வழங்கி வரும் சாதனைத் தமிழன் விருது ஈழத்தின் இசைவாணர் எம்.கண்ணன் அவர்களுக்கு 2023 டிசம்பர் 31ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியக் கலாசார மத்திய நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. ஆறு தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்திருநாட்டில் தனது இசை வேர்களைப் படரவிட்ட ஓர் இசை விருட்சம் போற்றிப்புகழப்பட்டு மாண்பேற்றப்பட்டமை ஈழத்துக் கலையுலகத்தையே புளகாங்கிதம் அடையவைத்தது.

ஈழத்தில் இசைக்காக தம் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்து வரும் ஓர் ஒப்பற்ற கலைஞர் எம்.கண்ணன். யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி என்றாலே நினைவிற்கு வரும் பெயர் கண்ணன் கோஷ்ரி. இந்தக் கண்ணன் கோஷ்ரி என்ற பெயர் கண்ணன் அவர்கள் தனது இசைக்குழுவுக்கு வைத்த பெயரல்ல. அது மக்கள் சூட்டிய பெயர். வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின் நாடகங்களுக்கு இசையமைத்து இசைத்துறைக்குள் வருகை தந்தார்.

ஆறு தசாப்த காலத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் கலை, கலாசாரம் மிக உன்னதமாகப் பேணப்பட்டு வந்தது. கலைகளால் யாழ்ப்பாணம் கோலாகலமாகத் திகழ்ந்தது. இந்தியாவிலிருந்து கலைஞர்கள் இலங்கைக்கு வருகை தந்து, குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆலய திருவிழா காலங்களில் அங்கேயே தங்கியிருந்து ஆடல்,பாடல் என இசை நிகழ்ச்சிகள் வழங்கி வந்தார்கள். ஆறு மாத காலம் இந்தியக் கலைஞர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார்கள். திடீரென இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கையினால் இந்தியக் கலைஞர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவது நிறுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மக்களுக்கு அப்பொழுது ஆடல், பாடல், இசை என எதுவும் இல்லாத நிலை ஏற்பட்ட வேளையிலேயே யாழ்.மண்ணில் இசைக்குழு, நடனக்குழு எனப் படிப்படியாகப் பல மகிழ்வூட்டும் கலையின்பம் தரும் கலைக்குழுக்கள், கழகங்கள் உருவாகின. யாழ்ப்பாணத்தில் ஓர் இசைக்குழுவின் தேவை இருந்தது. அதனை நிறைவேற்றியவர் தான் கண்ணன் அவர்கள். மக்கள் எதிர்பார்த்திருந்த காலகட்டத்தில் உருவான இசைக்குழு கண்ணன் கோஷ்ரி.

எம்.கண்ணன் அவர்கள் முறைப்படி இசைக்கலை பயின்றவர். ஈழத்தில் புகழ்பெற்ற இசைப்புலவர் என். சண்முகரட்ணம், சிதம்பரம் கிருஷ்ணமூர்த்தி,சங்கீதபூஷணம் இராஜலிங்கம், சங்கீத வித்துவான் எஸ். பாலசிங்கம் என அதனது இசை முன்னோடிகளிடம் இசையின் நுணுக்கங்களை ஆழமாகக் கற்றுக்கொண்டவர். ஹிந்துஸ்தானியையும் கற்றுக்கொண்டவர். ஹார்மோனியம், கிற்றார், எக்கோடியன், கீ போட், வீணை, பியானோ, மிருதங்கம், தபேலா போன்ற இசைக்கருவிகளை எல்லாம் மிக லாவகமாக மீட்டும் திறமை வாய்ந்தவர்.

இவருடைய எக்கோடியன் இசை மீட்டலுக்காகவே பல்லாயிரக் கணக்கான இரசிகர்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் இரவிரவாகக் காத்திருந்த காலங்கள் மறக்கமுடியாதவை. இசைவாணர் கண்ணன் அவர்கள் மிகவும் விரும்பி இசைப்பது ஷாகிபாஜா என்ற வாத்தியம். ஈழத்தைப்பொறுத்தவரை இந்த வாத்தியத்தையத்தை இசைக்கும் ஒரே கலைஞராக இவரைத்தான் பார்க்க முடிந்திருக்கிறது. கண்ணன் அவர்கள் கண்ணன் கோஷ்ரி இசை நிகழ்ச்சிகள் பிரமாண்டமாக நடைபெறும் வேளைகளில் இந்த



ஷாகிபாஜா இசைக்கருவியுடனேயே காட்சி தருவார். யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரம் தவில் வாத்தியங்களை இணைத்து பிரமாண்டமான மேடை இசை நிகழ்ச்சிகளை வழங்கிய பெருமைக்குரியவர்.

அமரர் பொன்னம்பலம், அமரர் அருமைநாயகம், அமரர் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களை ஈழத்தின் புகழ் பெற்ற பாடகர்களாக வலம் வரவைத்தவர். அத்துடன், ஜெயா சௌந்தரராஜனை கண்ணன் கோஷ்ரியின் பிரதான பாடகராகத் திகழவைத்தார். (தாயகப்பாடகர் சுகுமார் அவர்களின் தந்தை) சர்வானந்தா, மீன்பாடும் தேன்நாடு மட்டக்களப்பிலிருந்து சங்கீதபூஷணம் சாந்தாவதி ஆகியோரை கண்ணன் கோஷ்ரியில் அங்கம் பெற வைத்தார்.

இசைவாணர் கண்ணனின் இசையில் மலர்ந்த ஹசந்தனக் குடமெடுத்து தாம்பூலத் தட்டேந்தி மங்கலக் கணபதிக்குப் பூசைகள் செய்திடுவோம் என்ற பாடலின் சொந்தக்காரரான கனகாம்பாள் சதாசிவம் அவர்களைக் கண்ணன் கோஷ்ரியின் பாடகியாகத் திகழவைத்துப் பெருமைப்படுத்தியவர். “ஏ மாமா நீ ஒரு கோமாளிதான்” என்ற பாடலை கோமாளிகள் திரைப்படத்தில் கனகாம்பாள் சதாசிவம் அவர்களைப் பாட வைத்து அவருக்குப் புகழீட்டிக்கொடுத்தவர்.

கண்ணன் கோஷ்ரியில் மிக நீண்ட காலம் பிரதான பாடகர்களாக விளங்கியவர்கள், அண்மையில் காலமான ஸ்ரனி சிவானந்தன், கனடாவில் வாழ்ந்து வரும் அமுதன் அண்ணாமலை ஆகியோர். இசையரங்க மேடைகள் தோறும் அமுதன் அண்ணாமலை அவர்கள் பாடிவரும் “மாணிக்கத் தேரிலே மயில் வந்தது அந்த மயிலாசனத்திலே வேல்வந்தது” என்ற ஈழத்து இரத்தினம் எழுதிய பாடல் இசைவாணர் கண்ணன், ஸவாஹிர் மாஸ்டர் ஆகியோர் புகழை உலகெங்கும் பறைசாற்றி வருகிறது.

கண்ணன் கோஷ்ரி வரலாறே தனியாக ஒரு நூலாக எழுதவேண்டியதாகும். கண்ணன் கோஷ்ரி தான் இசைவாணர் கண்ணன் அவர்களை மக்களிடம் எடுத்துச் சென்றது. மேடை இசை நிகழ்ச்சியைப் பார்த்து இரசித்த அன்றைய இலங்கை வானொலி அதிகாரி கே.எஸ்.நடராஜா அவர்கள் கண்ணன் அவர்களை வானொலி நிலையத்துக்கு அழைத்து அங்கே ஈழத்து மெல்லிசையில் ஆளுமை செலுத்த வழி வகுத்தார். கண்ணன்- ஸவாஹிர், கண்ணன்-நேசம் என வானொலியில் மெல்லிசையிலும், பின்னர் பொப்பிசையிலும் புகழ் கொடி நாட்டினார். அவரது இசை வடிவங்கள் இன்றும் பதிவுகளாக உள்ளன.

வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் அவ்வப் பொழுது ஒலி,ஒளிபரப்புச் செய்கின்றன. தொடர்ந்து கோமாளிகள் ஏமாளிகள் தெய்வம் தந்த வீடு ஆகிய திரைப்டங்களுக்கு கண்ணன்-நேசம் என இசையமைப்பாளராகத் திகழ்ந்துள்ளார். தெய்வம் தந்த வீடு திரைப்படத்தில் கண்ணன் தவில் இசைக்கலைஞராக நடித்திருக்கிறார். திரையிசையிலும் கண்ணன் பெயர் பதித்தார். கோமாளிகள் திரைப்பட இசையமைப்புப் பணிகள் நடைபெற்ற அந்த நாள்களில் இசைஞானி இளையராஜா கொழும்புக்கு வருகை தந்திருந்தார். இசைவாணரும் இசைஞானியும் சந்தித்துப் பேசியிருந்தனர். அரங்க இசை நிகழ்ச்சிகள், இலங்கை வானொலி மெல்லிசை, பொப்பிசை, திரை இசை என யாவற்றிலும் பெயர் பதித்துள்ளார் கண்ணன் அவர்கள்.

மேற்படி நிகழ்வில் இந்தியாவில் சாதனை படைத்த அசானி மற்றும் கில்மிஷா இருவருக்கும் இசைவாணர் அவர்களால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன் டான் குழுமத்தின் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



ஈழத்து இசையின் முதலாம்,,, மூன்றாம் தலைமுறைகளின் அடையாளங்கள் இணைக்கப்பட்டதும், அதன் தற்போதைய நிலையும் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டதும் சிறப்பானது. இதனை பேணுதலும் மேலும் வளர்ப்பதற்கான அணுகுமுறைகளையும் அதற்கான களங்களையும் அமைத்துக் கொள்வதன் அவசியத்தை இந்நிகழ்வு வெளிப்படுத்தியுள்ளது.

நன்றி எஸ். கே. ராஜென்

# தெல்லி நகர் துர்க்கையம்மன் கோவிலில் சிறப்புற நடைபெற்ற பட்டிப் பொங்கல்



தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் அன்னையின் பிள்ளைகளாக வளர்ந்து வரும் தெய்வீக பசுக்களின், தாராள மனத்தினையும் கொடை செய்யும் உள்ளத்தையும் நன்றியுடன் நினைவுகூரும் நோக்கில் 16.01.2024 பி.ப 3.30 மணிக்கு பட்டிப் பொங்கல் விழா சிறப்புடன் நடைபெற்றது.


தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் மற்றும் இல்லப் பிள்ளைகளின் பங்கு பற்றலுடன் இவ் விழா சிறப்புடன் நடைபெற்றது. தமது முற்பிறப்பில் பல நூறு தவம் செய்ததன் பயனாக இந்தப் பசுக்கள் தேவியின் நிழலில் ஆனந்தமாக வாழ்ந்து வருகின்றன.

அன்பையும் கருணையினையும் உலகிற்கு சொல்லும் தெய்வீக குணங்கள் இந்த பசுக்களிடம் இருப்பதாக செஞ்சொற்செல்வர் தெரிவித்தார். கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு ***மாடு*** அல்ல மற்றயவை என்று செல்வத்தை மாடு என்னும் பொருள்பட வள்ளுவரும் உரைக்கின்றார்.

முற்காலத்தில் ராஜாக்கள் அரண்மனைகள் கட்டும் போது உபய தோமுகி என்னும் பூஜை செய்து தான் பின் கட்டடம் கட்டுவார்கள்.உபய தோமுகி என்பது ஒரு பசு ஆகும். அந்த பசு ஈனும் போது கன்றின் முன்னங்கால்களும் தலையும் தான் முதலில் வரும். கன்று போடும் காலத்தில் இவ்வாறு இரு பக்கமும் தலையுடைய பசுவை உபய தோமுகி என்று சொல்வார்கள். அப்பொழுது அந்த பசுவை வலம் வந்து வழிபட வேண்டும்.

மாட்டின் வயிற்றில் இருந்து கன்று வெளிப்படும் பொழுது முப்பத்து முக்கோடி தேவர்களும் மகாலட்சுமியாக நினைத்து வணங்கியும், ஆசீர்வாதமும் செய்வார்கள். அப்பொழுது 3 முறை வலம் வந்து வணங்கி தங்களுக்கு என்ன பிரச்சினைகள் தீரவில்லையோ அது விரைவில் தீர்ந்து நல்ல வழி கிடைக்க வேண்டும் என வேண்டிக் கொண்டால் பயன் உறுதியாக விரைவில் கிடைக்கும்.

ஒருமுறை திலீப மகாராஜனின் அசுவமேதக் குதிரை யை தூக்கிச் சென்ற தேவேந்திரன் மாயையால் தன்னை மறைத்துக் கொண்டான். குதிரையை தேடிச்சென்ற மகாராஜன், கோசலத்தால் (கோமியம்) தன் கண்களைக் கழுவிக்கொள்ள, தேவேந்திரனின் மாயை அகன்றது. தேவேந்திர னிடமிருந்து அசுவமேதக் குதிரையை மகாராஜன் மீட்டு வந்தான். அன்னை புவனேஸ்வரி இப்பூலோகத்தில் வசி'டர் ஆசிரமத்தில் தேவ பசுவாக இருந்த நந்தினியின் விளங்குகிறாள் என்று தேவி புராணங்கள் கூறுகின்றன.



பசுவின் கால்பட்ட தூசியைத்தான் ரகு சக்ரவர்த்தி, அஜ சக்ரவர்த்தி, தசரதச் சக்ரவர்த்தி போன்ற ராஜாதி ராஜாக்கள் எல்லோரும் பூசிக்கொண்டார்கள். புண்ணிய நதிகள், சமுத்திரங்கள் பசுவின் உடலில் இருப்பதால் பசுவை வலம் வந்து வணங்கினால் பூமியை வலம் வந்து வணங்கிய பலன் கிடைக்கும். பசுவின் பிரு'ட பாகத்தில் லட்சுமி வாசம் செய்வதால் பெருமாள் கோவிலில் விஸ்வரூப தரிசனத்தின் போது பெருமாளின் சந்நிதி நோக்கி பசுவின் பிரு'ட பாகம் இருக்கும்படி செய்து, பகவானும் மகாலட்சுமியைப் பார்த்துக் கொள்வது போல செய்கிறார்கள் பசுவை அதிகாலையில் பார்ப்பதும், வணங்குவதும் புண்ணியமாகும்.

இவ்வாறு எண்ணற்ற சிறப்புக்களை கொண்ட பசுக்களுக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வரின் ஏற்பாட்டில் பட்டிப் பொங்கல் விழா சிறப்புடன் நடைபெற்றது.

# சிந்திக்க வைத்த கருத்தரங்கு

கீரிமலை சிவபூமி மண்டபத்தில் நடந்த இரு நாள் "அறிவோம் தெளிவோம்." கலந்துரையாடல் கருத்தரங்கில் இந்து சமயத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பத்து சவால்களை இனங்கண்டு மனம் திறந்து உரையாடினார்கள்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கனடா சைவசித்தாந்த பீடமும் இணைந்து, திணைக்கள பணிப்பாளர் திரு. அநிருத்தனன் தலைமையில் மேற்படி நிகழ்வை ஒழுங்கு செய்தனர். மருத்துவர் லம்போதரன் வளவாளராக கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

1. ஆலயங்களில் எதிர்கொள்ளும் சவால்கள்
2. ஆன்மீக குருமார், ஆசிரியர்களில் எதிர்கொள்ளும் சவால்கள்
3. திருமணம், மணவாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள்
4. பொருளாதாரத்தில் எதிர்கொள்ளும் சவால்கள்
5. கல்வியில் எதிர்கொள்ளும் சவால்கள்
6. சமய அமைப்புகளில் எதிர்கொள்ளும் சவால்கள்
7. சாதி ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள்
8. தனிப்பட்ட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்கள்
9. மற்றைய மதங்களின் சவால்கள்
10. அரசியல் ரீதியில் எதிர்கொள்ளும் சவால்கள்.







## பம்பலப்பிட்டி இந்துவின் முத்தமிழ் விழா

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் முத்தமிழ் விழா மிகச்சிறப்பாக 21.12.2023 அன்று கல்லூரி முதல்வர் கணபதிப்பிள்ளை நாகேந்திரா தலைமையில் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் அவர்கள் கலந்து கொண்டு விசேட உரை ஆற்றினார். மாணவர்களின் கண்கவர் தமிழ் நிறைந்த கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.



## ஆத்ம சாந்தி பிரார்த்தனை



எமது கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் முன்னாள் உப அதிபராக கடமையாற்றிய திருமதி. அன்னம்மா பவளமணி ஜயக்குமார் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரத்திப்பதோடு அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

# தேவை உடையவனே ஏழை

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் படைத்தவர்கள் நாட்டில் மிகக்குறைவு. ஒரு அரசன் இன்னொரு நாட்டின் மீது படை எடுத்துச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு காட்டைக் கடக்க வேண்டியிருந்தது. அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவரிடம் தனது வெற்றிக்காக ஆசி பெறச்சென்றான். காட்டில் கடும் குளிர் அடித்தது. முனிவரோ, இடையில் மட்டுமே ஆடை உடுத்தியிருந்தார். தியானத்தில் ஆழ்ந்திருந்த அவருக்கு, தனது மேலாடையை எடுத்துப் போர்த்தினான் அரசன்.



கண்விழித்த முனிவர் அரசனைப் பார்த்தார். யாரப்பா நீ! எதற்காக இங்கே நிற்கிறாய்! முனிவரே! நான் பண்ணைபுரத்தின் அரசன். பக்கத்து நாட்டின் மீது படையெடுத்துச் செல்கிறேன். நான் வெற்றி பெற. தங்களிடம் ஆசி பெறவே காத்திருக்கிறேன். சரி! எனக்கு அணிவித்த இந்த மேலாடையை எடுத்துச் செல். உங்களுக்கு குளிரும் என்று தானே அணிவித்தேன். தேவையில்லை! நான் ஏற்கனவே பணக்காரன். இந்தச் சொத்தையும் சேர்த்து சுமக்க தயாராக இல்லை.

என்னிடம் இதுபோல் பல சால்வைகள் உள்ளன. அதில் ஒன்றைத் தான் கொடுத்தேன். இதை ஏற்பதில் என்ன தயக்கம்! மகனே! உன்னிடம் ஏற்கனவே ஒரு நாடு இருக்கிறது. அது போதாதென்று இன்னொரு நாட்டையும் பிடிக்கச் செல்கிறாய். அப்படியானால், உனக்கு தேவை இருக்கிறது. தேவை உடையவனே ஏழை. அவனுக்கே பொருட்கள் தேவை. அரசனுக்கு துறவியின் வார்த்தைகள் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. போர் எண்ணத்தைக் கைவிட்டு, நாடு திரும்பினான்.

# யாழ்.பல்கலையில் புதியஅலங்கார நுழைவாயில்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிக பீட பழைய மாணவர்களின் அனுசரணையில் அமைக்கப்படவுள்ள அலங்கார நுழைவாயிலுக்கான அத்திபார பூமி பூஜை 15.12.2023 வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

வளாகத்தினுள் அமைந்துள்ள வித்யா கணபதி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாட்டைத் தொடர்ந்து, பீடத்தின் பிரதான நுழைவாயிலில் அத்திபார பூமி பூஜை நடைபெற்றது.



# துர்க்கையம்மன் மஹா கும்பாபிஷேகப் பணிகள்...



தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேக பணிகள், தற்பொழுது சிறப்புற நடைபெற்று வருகின்றது. தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகம் வரும் 25.03.2024ம் திகதி நடைபெற அன்னையின் திருவருள் கூடியுள்ளது.

எங்கள் அம்பாளின் திருவருளினால் எமது தேவஸ்தானத்தில் தற்பொழுது திருப்பணி வேலைகள் மிகவும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

இந்தப் பணிகளை உரிய காலத்தில் முழுமையாக முடிவுறுத்தி எங்கள் அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தினை மிகவும் சிறப்புற நடாத்துவதற்குரிய முழுமையான பணிகளை எமது தேவஸ்தானம் மேற்கொண்டு வருகின்றது.

எமது இந்தப் பணிகளுக்கு உலகெங்கும் பரந்து வாழும் அன்னையின் பக்தர்களிடம் இருந்து உதவிகளை எமது தேவஸ்தானம் வேண்டி நிற்கின்றது.

எனவே எமது வேதவஸ்தானத்தின் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது எமது வங்கி இலக்கங்கள் ஊடாகவோ தங்களது உதவிகளை எமது அன்னையின் திருப் பணிகளுக்கு பக்தர்கள் தங்களது உதவிகளை வழங்க முடியும்.

உலகப் புகழ்பெற்ற எங்கள் தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகப் பணிகள் யாவும் சிறப்புடன் நிறைவு பெற பக்தர்களின் தாராள உதவிகளை நாங்கள் வேண்டி நிற்கின்றோம்.

இந்தப் பணிகளுக்கு தங்களின் உதவிகளை வழங்கும் பக்தர்கள் எமது அலுவலகத்தில் அதற்குரிய பற்றுச் சீட்டினை பெற்றுக் கொள்ள முடியும். வங்கிகளில் வைப்பிடும் பக்தர்கள்,

வாரசமயயைஅஅயவெநஅிடந;பஅயடை.உழஅ என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கு தங்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

**வங்கி இலக்கங்கள்**
**இலங்கை வங்கி சுன்னாகம் கிளை, கணக்கு இல:~07470940 அல்லது 77683985,**
**கொமர்ஷல் வங்கி சுன்னாம் கிளை, கணக்கு இல:~ஊ1107000214**


மேலும் விபரங்களுக்கு https://www.tellidurga.org/donate-us/ என்ற எமது இணையத்தள முகவரியினை பார்வையிடுங்கள்.

நன்றி

செஞ்சொற்செல்வர்,
தலைவர், துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



# இணுவில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவம்



யாழ்ப்பாணம் இணுவில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில் தேர்த் திருவிழா 09.01.2024 அன்று பக்தி பூர்வமாக நடைபெற்றது. பெருமளவான பக்தர்கள் ஒன்று கூடி வடம் பிடித்து அஞ்சனை மைந்தனை துதித்து வணங்கினார்கள்.





# சுனாமி அனர்த்த நினைவேந்தல் நிகழ்வு

கடந்த 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் காரணமாக மரணம் அடைந்த உயிர்களின் ஆத்ம சாந்தி வேண்டி, நினைவுகூரல் நிகழ்வு 26.12.2023 மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. கடந்த 2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின்பு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 26ம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக அனுஸ்டிக்கப்படுகின்றது. இயற்கை அனர்த்தம் காரணமாக மரணம் அடைந்தவர்களை நினைவு கூருவதற்கும் அனர்த்தங்கள் தொடர்பில் பொது மக்களிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தேசிய பாதுகாப்பு தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

சுனாமி வந்த நாளான 26.12.2004 அன்று திருவெம்பாவையின் ஒன்பதாம் நாள். அதுபோல் 2023 சுனாமி நினைவு நாள் திருவெம்பாவையின் ஒன்பதாம் நாளிலே வந்துள்ளது.



இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(தை 2024) ISBN-978-955-7420-00-4